## கொரோனா வைரஸ் தொடர்பாக அதிகமாக கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும்

*ஆனி 22, 2020 முதல், புதிய கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. 1000 க்கும் மேற்பட்ட நபர்களுடன் நடைபெறும் பெரும் நிகழ்வுகள் ஆணி மாத இறுதி வரை தடைசெய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*1.5 மீட்டர் தூரத்தை பராமரிக்க முடியாவிட்டால் தொற்றுநோய்க்கான கணிசமான ஆபத்து உள்ளது. இது எப்போதுமே இருக்கக்கூடும், குறிப்பாக பொது போக்குவரத்தில்.*

**பொறுப்புணர்வு மிக்க அவசியம்**: *தொற்றுநோயிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சிறந்த வழி, கைகளை சவக்காரத்துடன் தவறாமல் கழுவுவதும், இடைவெளியை வைத்திருப்பதும் ஆகும்.*

### தொற்றும் முறை மற்றும் ஆபத்துக்கள்

*இந்த சுகாதார, நடத்தை நடைமுறைகள் ஏன் அவசியம்*

*புதிய கொரோனா வைரஸை பொறுத்தவரை அதற்கு* **மனிதர்கள் இன்னும் எதிர்ப்புசக்தியை பெறவில்லை**. *ஆகயால்* **பலர் நோய்வாய்படலாம்**. *ஆகயால் நாம் கொரோனா வைரஸ் பரவலை தடுக்க வேண்டும்.அதிக நோய்வாய்ப்பட வாய்ப்புள்ள மக்களை பாதுகாக்கப்படல் வேண்டும். அவ்வாரானவர்கள் 65 வயதிற்கு மேற்றப்பட்டவர்கள் மற்றும் முன்பே நோய்வாய்ப்பட்டவர்கள். அவ்வாரான நோய்கள்:*

*அவ்வாரானவர்கள:*

- *65 வயதிற்கு மேற்பட்டவர்கள்*
- *பின்வரும் நோய்கள் உள்ள பெரியவர்கள்:*
    - *உயர் இரத்த அழுத்தம்*
    - *நீரழிவு நோய்*
    - *இருதய நோய்கள்*
    - *நாள்பட்ட சுவாச நோய்கள்*
    - *நோயெதிர்ப்பு சக்த்தியை பலவீனப்படுத்தும் நோய்கள் மற்றும் சிகிச்சைகள்*
    - *புற்றுநோய்*

*அல்லது*

- *உடல் பருமன் (40 kg/m2 அல்லது அதற்கு மேற்பட்ட BMI)*

*நீங்கள் ஆபத்துக்குரியவரானவரா என்பது உங்களுக்குத் தெரியவேண்டும் என்றால், தயவுசெய்து உங்கள் மருத்துவரைத் தொடர்பு கொள்ளுங்கள்.*

*அரசாங்கத்தால் முன்மொழியப்படும் நடவடிக்கைகளை கைப்பற்றினால் நாம் இவ்வாறு நோய்வாய்ப்பட்ட மக்களையும் பாதுகாக்கலாம். இதனூடாக கடுமையாக நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் போதிய சிகிச்சைகளை பெறக்கூடிய வாய்ப்பை அதிகரிக்கலாம்.இதுமட்டமின்றி தற்போதய நிலையில் அவசரசிகிச்சைசாலைகளிலம் மக்களை உள்ளடக்கும் இடவசதிகளும் குறைந்துவருகிறது.*

*நீங்கள் 65 வயதிற்கு மேற்பட்டவரா, அல்லது மேலே பட்டியலிடப்பட்ட முந்தைய நோய்கள் ஏதேனும் உள்ளவரா?*

*அப்படியென்றால் பின்வரும் நடவடிக்கைகள் பொருந்தும்:*

- *சுகாதார மற்றும் நடத்தை விதிகளை நீங்கள் கண்டிப்பாக பின்பற்றினால், உங்கள் வீட்டை விட்டு வெளியேறலாம். பல நபர்களுடன் (எ.கா. தொடர்வண்டி நிலையங்கள், பொது போக்குவரத்து) மற்றும். உச்ச நேரங்கள் (எ.கா. சனிக்கிழமைகளில் கடைக்கு செல்வது, பொது போக்குவரத்தில் பயணிப்பதை) தவிர்க்கவும்.*
- *தேவையற்ற தொடர்புகளைத் தவிர்த்து, மற்றவர்களிடமிருந்து (குறைந்தது 1,5 மீட்டர்) இடைவெளியை வைத்திருங்கள்.*
- *முடிந்தால், உங்களுக்காக ஒரு நண்பர், பக்கத்து வீட்டவரை கடைகளுக்கு பொருட்கள் வாங்க அனுப்புங்கள் அல்லது இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் வாழும் நகரசபை மூலம் பல்வேறு அமைப்புகளின் உதவிகளை பெறலாம்.*
- *வணிக மற்றும் தனியார் சந்திப்புகளுக்கு, தொலைபேசி, Skype போன்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தவும்.*

*நீங்கள் ஒரு மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்றால், உங்கள் தனியார் வாகனத்தை அல்லது மிதிவண்டியை பயன்படுத்துங்கள், அல்லது நடந்து செல்லுங்கள். இது முடியாவிட்டால், ஒரு டாக்ஸியில் பயணிக்கவும். மற்றவர்களிடமிருந்து குறைந்தது இரண்டு மீட்டர் இடைவெளியை வைத்து சுகாதார விதிகளை பின்பற்றவும். பரிந்துரை: உங்களால் இடைவெளியை கடைப்பிடிக்க முடியாவிட்டால் சுகாதார முகமூடியை அணியுங்கள்.*

*நீங்கள் வீட்டில் அச்சுறுத்தப்படுகிறீர்களா? நீங்கள் உதவி அல்லது பாதுகாப்பைத் தேடுகிறீர்களா?*


- www.opferhilfe-schweiz.ch / www.aide-aux-victimes.ch / www.aiuto-alle-vittime.ch
  *இணையதளத்தில் சுவிட்சர்லாந்து முழுவதும் மறைமுகமான ஆலோசனை மற்றும் பாதுகாப்பிற்கான தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளை பெரலாம்.*
- *அவசரகாலத்தில், காவல்துறையை அழைக்கவும்: தொலைபேசி எண்* **117**

*பிற முக்கியமான தொலைபேசி எண்கள்:*

- *மருத்துவ அவசர எண் (ஆம்புலன்ஸ்)* **144***: சுவிட்சர்லாந்து முழுவதும் உள்ள அனைத்து மருத்துவ அவசரநிலைகளுக்கும் எந்தநேரமும் தொடர்புகொள்ளலாம்.*
- *புதிய கொரோனா வைரஸிற்கான தகவல்களம்: புதிய கொரோனா வைரஸ் குறித்த கேள்விகளுக்கு* **058 463 00 00** *இல் பதிலளிக்கப்படும்.*
- *உங்களிடம் பொதுமருத்துவர் இல்லையென்றால்: மெட்கேட் (Medgate)* **0844 844 911** *ஒவ்வொரு நாளும் மற்றும் இரவிலும் உங்களுக்கு உதவி கிடைக்கும்.*

### வேலைக்குத் திரும்பு செல்வது

*மத்திய அரசு பொது போக்குவரத்தில் அதிகபட்ச பயன்பாட்டை தவிர்ப்பதற்கும், முடிந்தவர்களை வீட்டிலிருந்து பணியாற்ற பரிந்துரைக்கிறது. இருப்பினும், நீங்கள் எப்போது பணிக்குத் திரும்ப வேண்டும் என்பதை நீங்கள் பணிபுரியும் நிறுவனமே தீர்மானிக்கிறது.*
*நீங்கள் வேலை செய்கிறீர்கள் மற்றும் ஏற்கனவே நோய்வாய்பட்டு உங்களுக்கு ஆபத்து இருந்தால், உங்கள் நிறுவனம் உங்களைப்* ***பாதுகாக்க வேண்டும்.***



## பொது போக்குவரத்தில் சுகாதார முகமூடி கட்டாயம்

***சுகாதார முகமூடியின் எங்கே கட்டாயமாக அணியவேண்டும்?***
*சுகாதார முகமூடி அனைத்து பொது போக்குவரத்து சாதனங்களிலும் அவசியம், அதாவது புகைவண்டி, ராம்கள் மற்றும் பேருந்துகளில், கேபிள் கார்கள் அல்லது கப்பல்களில். ஸ்கி லிஃப்ட் (Skilifte) மற்றும் நாற்காலி லிஃப்ட் (Sesselbahnen) ஆகியவை கட்டாயம் இல்லை.*

***சிறு குழந்தைகள் மற்றும் பிறருக்கு விதிவிலக்குகள் உள்ளதா?***
*பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முகமூடித் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. கூடுதலாக,* ***சிறப்பு*** *காரணங்களுக்காக முகமூடி அணிய முடியாத நபர்களும், குறிப்பாக மருத்துவர்களும் விலக்கப்படுகிறார்கள்.*

***ரயில் அல்லது பஸ் பாதி காலியாக இருக்கும்போது நானும் முகமூடி அணிய வேண்டுமா?***
*பொது போக்குவரத்தில் எத்தனை பேர் இருந்தாலும் முகமூடி தேவை பொருந்தும். எத்தனை பேர் வருவார்கள் என்பது உங்களுக்கு முன்கூட்டியே தெரியாது.*
*விடுமுறை நாட்களில் அவசர நேர போக்குவரத்து மற்றும் ஓய்வு நேர போக்குவரத்தை கருத்தில் கொண்டு, அதிக பயணிகள் எதிர்பார்க்கப்படுவார்கள்.*

***எனக்கு முகமூடி இல்லையென்றால்: என் முகம் மற்றும் மூக்கை துணியை கொண்டு மறைக்கலாமா?***

*இல்லை, முகமூடி கட்டாயம் ஒரு துணியால் பூர்த்தி செய்யப்படமாட்டாது. ஒரு துணி நோய்த்தொற்றுக்கு எதிராக போதுமான பாதுகாப்பை வழங்காது மற்றும் வெளிப்புற பாதுகாப்பு மட்டுமே உள்ளது. ஒரு சுகாதார முகமூடி அல்லது சரியானமுறையில் தயாரிக்கப்பட்ட முகமூடி துணி முகமூடி அணிய வேண்டும்.*

***பயணிகள் சுகாதார முகமூடி அணிந்திருக்கிறார்களா என்பதை யார் கண்காணிக்கின்றார்கள்?***

*கண்காணிப்பு மற்றும் நடைமுறைப்படுத்துவது ரயில் ஊழியர்கள் மற்றும் ரயில்வே காவல்துறை மற்றும் பாதுகாப்பு சேவகர்களால் மேற்கொள்ளப்படுகிறது.*

***நான் சுகாதார முகமூடி அணிய மறுத்தால் என்ன நடக்கும்?***
*முகமூடி அணிய மறுக்கும் எவரும் போக்குவரத்து சாதனத்தை அடுத்த நிலையத்தில் விட்டு வெளியேற வேண்டும்.*
*ஒரு நபர் பாதுகாப்புக் காவலர்களின் கோரிக்கைகளை எதிர்த்தால், வாகனத்தை விட்டு வெளியேறவில்லை என்றால், அவர்கள் கீழ்ப்படியாமைக்கு ஒரு அபராதத்தை பெறலாம் (சாதாரண பொதுபோக்குவரத்தில் கொடுக்கப்படும் அபராத நடைமுறை மூலம், சட்டரீதியாக கொடுக்கும் அபராதம் இல்லை).*

